அறங்காவலர்களின் சொத்து அத்தாட்சி

திரு. எஸ்.எஸ். தென்னரசு (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருக்கோயில்களில் அறங்காவலர்களாக நியமனம் பெறும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் சொத்து அத்தாட்சி தர வேண்டுமென்ற விதியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Harijan Welfare Department Schools

* 189 Q.—THIRU K. ARIVAZHAGAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the order issued to the effect that Grade-I scale of pay should be extended to the fully qualified Grade-II Tamil Pandits will apply to the teachers of the Harijan Welfare Schools also ;

(*b*) if so, whether the fully qualified Grade-II Tamil Pandits of Harijan Welfare Schools in Chingleput District are being paid Grade-I scale of pay ; and

(*c*) if not, whether the Government will take necessary action therefor?

அரிசன நலத்துறைப் பள்ளிகள்

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முழுத்தகுதியுள்ள இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுக்கு முதுநிலை ஊதியம் வழங்கப்படவேண்டும் என்னும் அரசு ஆணை அரிசனநலத் துறைப் பள்ளிகளுக்கும் (Harijan Welfare Schools) பொருந்துமா ?

(இ) ஆமெனில், செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள அரிசனநலத் துறை பள்ளிகளில் முழுத்தகுதியுடன் பணியாற்றும் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுக்கு முதுநிலைத் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறதா ?

1975 மார்ச் 25]

(உ) இல்லையெனில், அதற்கான நடவடிக்கையினை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) முழுத்தகுதியுள்ள இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களை முதல்நிலைத் தமிழாசிரியர் பதவிகளில் நியமிக்க வேண்டும் என்னும் கல்வித்துறை வெளியிட்ட அரசு ஆணை மாநிலத்தில் அரிசன நலத் துறை நடத்தும் பள்ளியிலுள்ள முழுத் தகுதி பெற்றுள்ள தமிழாசிரியர்களுக்கும் இப்பொழுது அமுலாக்கப்பட்டுள்ளது.

திரு. க. அறிவழகன் : தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் இதுபோன்ற ஆணைகள் பிறப்பித்தும் பல மாவட்டங்களில் அது நிறைவேற்றப்படவில்லை. இப்போதாவது அது நிறைவேற்றப்பட்டு விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : தலைவர் அவர்களே, 1-1-74 முதற்கொண்டு முதல் நிலைத் தமிழாசிரியர்கள் பெறும் ஊதிய விகிதத்தைப் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 12 ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, இது நலத்துறை ஆகும். நலத்துறையிலே பள்ளி நடத்தும்போது, இதிலே ஆசிரியர்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகள் பொறுத்து, கடைசியாக இரண்டு ஆண்டுகள் கழித்து அல்லது ஒன்றரை ஆண்டுகள் கழித்து எல்லாத் துறைகளிலும் நிறைவேற்றிய பிறகு மீண்டும் தனியாகச் சென்று கேட்கும்போது மட்டுமே இதிலே கவனம் செலுத்தப்படுகிறது. அரசுத் துறைப் பள்ளிகள்தான் இவை. நலத்துறை அரசுத் துறையாக இருந்தும்கூட, அரசுத் துறையில் உத்தரவிடும்போது, இங்கு மட்டும் அமுலாகாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? எதிர்காலத்திலாவது ஒவ்வொரு உத்தரவும் அமுலாகின்றபோது, நடைமுறைப் படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை அமையுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நலத்துறையானது பொதுவாக சமுதாய நலத்துறை என்று அமைக்கப்பட்டிருந்தாலும், அதிலே கல்வியும் சேர்க்கப்பட்டு, பொதுக் கல்வியோடு இது இணையாமல் தனியாக ஒரு துறை கல்வியைப்பற்றிக் கவனித்து வருகிறது. கல்வித் துறையிலே எந்தெந்த உத்தரவுகள் எப்போதைக்கப்போது இடப்பட்டாலும், இந்த உத்தரவுகளை முறையாக இந்த இலாகாவுக்கு வந்த பிறகு, செயல்படுத்தத் தொடங்குகிறோம். இதுதான் இன்றைக்கு இருக்கின்ற நிலை.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்வித் துறையிலே இருந்து வந்தவுடனே செயல்படுத்துவதாகச் சொல்லுகிறார்கள். ஒருவேளை கல்வித் துறையிலே இருந்து இந்த இலாகாவுக்கு

நீண்ட காலத்திற்குப் பிறகு அனுப்பப்படுகிற நடைமுறை இருக்கிறதா என்று எனக்குத் தோன்றுகிறது. எல்லா மாவட்டங்களிலுமே இன்கிரிமெண்டு வழங்குதல், சமபளங்கள் மாற்றியமைத்தல் போன்ற பல காரியங்களிலே காலதாமதம் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து இனிமேல் எதிர்காலத்திலே அவ்வப்போது வழங்குகின்ற அளவுக்கு விரைவான நடவடிக்கையில் ஈடுபடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு என். இராஜாங்கம்: தலைவர் அவர்களே, கல்வித் துறையிலேயிருந்து ஆணைகளை இந்த இலாகாவிற்கு அனுப்பியவுடன் உடனடியாக கவனிப்பதற்கு இந்தத் துறை முடிவெடுக்கும்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, கல்வித் துறையிலாவது ஆணைகளை உடனடியாக அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பு வருகிறபோது விரிவாகப் பேசிக்கொள்ளலாமே.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும். இல்லாவிட்டால் இன்னும் காலதாமதம் ஏற்படும். இல்லாவிட்டால் கல்வித் துறை மற்ற துறைகளுக்கும், சம்பந்தப்பட்ட எல்லாத் துறைகளுக்கும் பைல்ஸை சர்குலேஷனில் அனுப்பினால், அது சுற்றிக் கொண்டு வர ஆறுமாதம் ஆகும். நான் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணுகின்றபோதுகூட, உடனடியாக நிறைவேற்ற முடியாது. ஆகவே, இங்கே ஆணை பிறப்பிக்கப்பட்ட பிறகு, உள்ளாட்சித் துறைப் பள்ளிகளிலும், அரிசனப் பள்ளிகளிலும் அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய வழிவகைகளைக் காலதாமதமில்லாமல் செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர் காலதாமதம் ஏற்பட்டுவிடும் என்று அஞ்சுகின்றார். கல்வித் துறையிலிருந்து வந்தால் இன்னும் காலதாமதம் ஏற்படும். ஆகவே இப்போது இருக்கிற முறைகளிலே கல்வித் துறையிலிருந்து ஆணை வந்தவுடன் பிற துறைகளில் முயற்சி மேற்கொள்ளுமபடி செய்வதுதான் நல்லது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1975 மார்ச் 25]

Thiru G. Vasantha Pai rose.

MR. CHAIRMAN: Has the hon. Member Thiru Vasantha Pai got anything to say?

THIRU G. VASANTHA PAI: Sir, may I know whether Question No. 4788 is being adjourned?

MR. CHAIRMAN: It is an Unstarred Question.

உடுக்குறியிடாத வினாக்கள்.

Persons sent abroad at Government Expense

1. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to place on the Table of the House:

(*a*) a list containing the names of persons, who have been sent abroad at the expense of the Government during the last 5 years, year wise;

(*b*) their designation;

(*c*) the countries they visited;

(*d*) the reason for which they were sent abroad; and

(*e*) the expenses incurred by the Government on behalf of each of them?

A. A statement @ containing the particulars is placed on the table of the House.

மருத்துவ சமுதாயத்தைச் சேர்ந்த செவிலித் தாய்கள்.

2. கே.—திரு ம. மாசிலாமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவ மனைகளில் மருத்துவ சமுதாயத்தைச் சேர்ந்த பெண்கள் எத்தனை பேர் செவிலித் தாயாகப் பணிபுரிந்து வருகின்றார்கள்?

ப.— 31 சதவிகித இடங்கள் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் மருத்துவர் வகுப்பைச் சேர்ந்தவர்களும் அடங்கியுள்ளனர். மருத்துவ சமுதாயத்தைப் பற்றி தனி விபரம் இல்லை.

சந்தன மரங்கள்.

3. கே.—திருவாளர்கள் எஸ். வெள்ள பாண்டியன், எல். பலராமன்: மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

@ 227-230 ....ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.